IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 160/2022

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | கோவிந்தம்மாள் |
| HUSBAND NAME | - | மகாதேவன் |
| VILLAGE | - | கீழ்முட்டுகூர் |
| TALUK | - | கே.வி.குப்பபம் தாலுக்கா |
| CASTE | - | |
| OCCUPATION | - | |
| RELIGION | - | |
| AGE | - | 85 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் A1, A3, A5 and A6 ஆஜர். எதிரிகள் 2, 4 மற்றும் 7 ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1. அ.சா.1 சின்னம்மாள் என்னுடைய மகள். எனக்கு கண் நன்றாக தெரியும். என்னுடைய மருமகன் 10.06.2020 அன்று இறந்து விட்டார். என்னுடைய மருமகன் ஷெட் கட்டி வைத்து இருந்தார். அதை தாமோதரன் இடித்து விட்டார். அது சம்மந்தமாக சண்டை வந்தது. முருகன் என் மருமகன் தலை மீது கொம்பால் அடித்து விட்டார். என் மகள் போய் தடுத்தார். தாமோதரன் என் மகளின் ஒரு அடியும், என் மருமகனை ஒரு அடியும் அடித்தார். தாமோதரன், காந்தி, மோகன் ராஜ், முருகன், நவீன் ராஜ், சரண்ராஜ், பாஸ்கரன் ஆகிய ஏழும் பேரும் கொம்பால் அடித்தார்கள். என் மருமகனுக்கு தலையில், கை, கால் ஆகிய இடங்களில் அடித்து ரத்தம் வந்தது.

2. என் மகளுக்கும் தலை, கை, காலில் அடித்து ரத்தம் வந்தது. நான் அதை பார்தேன். நான் அதை பார்த்து சத்தம் போட்டேன், பயந்து கொண்டு யாரும் வரவில்லை. என் மருமகனை என் பேரன் சத்தியன் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து செல்லும் போது போகும் வழியில் என் மருமகன் இறந்து விட்டார், அதே ஆம்புலன்ஸில் என் மகளையும் அழைத்து சென்றார்கள். என் மகள் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வந்த போது பனமடங்கி போலிசார் விசாரித்து கைரேகை வாங்கி சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை வீட்டு அருகில் போலிசார் விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு)**</u>

3. எனக்கு கண் நன்றாக தெரியும். கண்ணுக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை. சம்பவ சமயத்தில் கண்புறை காரணமாக பார்வை சரியாக தெரியாது என்றாலும் அதன்பிறகு கண்புறை அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றாலும், சரியல்ல. என் மகன் பெயர் வெங்கடேசன், அவர் ஊருக்குள் உள்ள வீட்டில் இருக்கிறார். சின்னம்மாள் நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். ஊருக்குள் உள்ள என் மகன் வீட்டிற்கும், தோட்டத்தில் உள்ள என் மகள் வீட்டிற்கும் சுமார் 2 கீ. மீட்டர் தூரம் இருக்கும். என் மகன் வீட்டில் நிரந்தரமாக இருப்பேன், என்னுடைய மகள் வீட்டிற்கு அவ்வப்போது வந்து செல்வேன். சம்பவம் ஆரம்பிப்பதற்கு முன்பு நான் என் மகளும் என் மகள் வீட்டில் இருந்தோம். என் மருமகன் வெளியில் போய் விட்டு அப்போது தான் வந்து கொண்டு இருந்தார்.

4. தாங்களும், தங்கள் மகளும் வீட்டிற்குள் இருந்த போது சத்தம் கேட்டு வீடு மற்றும் காம்பவுண்ட் விட்டு வெளியே வந்து பார்த்தீர்கள் என்றால், சரிதான். நாங்கள் முதன் முதலில் பார்த்த போது தாங்கள் மருமகன் ரத்த காயங்களுடன் கீழே விழுந்து கிடந்தார் என்றால், சரிதான். நானும், ஆம்புலன்ஸில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என் பேரன் சத்தியனும் எங்களோடு ஆம்புலன்ஸில் தான் வந்தார். போலிசார் தான் சம்பவ இடத்திற்கு வந்து

ஆம்புலன்ஸில் என் மகளையும், மருமகனையும் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். சம்பவத்தின் போது தாங்கள் சம்பவத்தில் இல்லை என்றாலும், தங்கள் மகன் வீட்டில் இருந்தீர்கள் என்றாலும் சம்பவத்தை கேள்விப்பட்டு தான் வந்து பார்த்தீர்கள் என்றாலும், சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னது போல் தங்கள் மகள் மற்றும் மருமகனை எதிரிகள் யாரும் தாக்கவில்லை என்றாலும், சரியல்ல. தங்கள் மகள் கேட்டு கொண்டதற்கிணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்தாகவும் எதிரிகள் தாக்கியதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 20.01.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

S/d. G. Radhakrishnan,

Additional District Judge(FTC)(FAC)

Vellore.